

*********************************************************************************************************

புதுக்கோட்டை' ஞானாலயா' நூலகத்தில் ஏழு மணி நேரம்...

**********************************************************************************************************

புதுக்கோட்டை நகரில் நடைபெற்ற ரசியப் புரட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்வில் பங்கேற்று உரை நிகழ்த்திய பின்னர் இரவு 8.30 மணி சுமாருக்கு அந்நகரில் கிருஷ்ணமூர்த்தி - டோரதி தம்பதியர் உருவாக்கியுள்ள 'ஞானாலயா' என்ற நூலகத்தைப் பார்வையிடச் சென்றோம். இதன் நிறுவனர் ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி என்றே அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுகிறார்.

சில ஆண்டுகளாகவே இந்நூலகத்திற்குச் சென்று வரவேண்டும் என்ற எண்ணம் எமக்குள் இருந்து கொண்டிருந்தது. எத்தனையோ முறை

புதுக்கோட்டைக்கு நிகழ்ச்சிகளுக்குச் சென்ற போது கூட, இந்நூலகத்திற்குச் செல்லும் வாய்ப்பு கிட்டாமலேயே போய்க்கொண்டிருந்தது.

8.30 மணிக்கு நூலகத்திற்குள் நுழைந்த நான் அதிகபட்சம் 9.30 மணி வரை அங்கிருந்து விட்டு இரவோடு இரவாக காரில் ஈரோடு புறப்படுவதாக திட்டம். ஆனால் திரு கிருஷ்ணமூர்த்தியும் அவரது மனைவியும் வெளிப்படுத்திய ஆர்வமும் ஈடுபாடும் ஒருலட்சம் புத்தகங்களை ஒரே இடத்தில் பார்த்த காட்சியும் எம்மை நெகிழ வைத்து விட்டன.

நூலகத்தின் ஒவ்வொரு பகுதியாகச் சென்று ஆங்காங்கு அரிய நூல்கள் பலவற்றை எடுத்து அவை தொடர்பான விளக்கங்கள் பேசுவது விவாதிப்பது கருத்துக்கள் கேட்பது என பொழுது போனதே உணராமல் இரவு 12.30 மணி ஆயிற்று.. 4மணி நேரத்திற்கு மேல் தம்பதி சகிதமாக உற்சாகத்துடன் எமது கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்துக் கொண்டு வந்தார்.

நள்ளிரவைத் தாண்டி விட்டதால் அவர்கள் வீட்டிலேயே தங்கி விட்டு அதிகாலைப் புறப்படுவதாகப் பயணத் திட்டம் மாற்றப்பட்டது. காலை 6 மணிக்கு புறப்படும் நேரத்தில் காபி குடித்து விட்டுப் பேச தொடங்கினால், காலை 9.30 மணியாகிவிட்டது.

காலையில் ஏ.கே.செட்டியார், ரோஜாமுத்தையா செட்டியார், கரிச்சான் குஞ்சு, தஞ்சைரமேஷ், கே.பாலதண்டயுதம் போன்ற பல ஆளுமைகளுடனான தனது அணுக்கமான உறவை உருக்கமாக கூறினார், ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி. இரவு, பகல் என்று ஏழு மணி நேரத்தைத் தாண்டியும் விடைப் பெற மனமில்லாமல் விடைபெற்ற அனுபவம் சற்று வித்தியாசமானது தான்.

இந்நூலகம் ஒரு கருவூலம். ஆய்வுக்கான நூல்களின் அணிவகுப்பு, நூற்றுக்கணக்கான பழந்தமிழ் நூல்கள், ஆயிரக்கணக்கான பழைய சிற்றிதழ்கள்... வெளிநாட்டினர் கூட இங்கு வந்து தங்கியிருந்து ஆய்வுகள் மேற்கொள்கின்றனர் .

தனது வீட்டின் அருகிலேயே தனது சுய ஆர்வத்தில் சொந்த செலவில் இந்நூலகத்திற்கென ஒரு தனிக்கட்டிடத்தைக் கட்டி புத்தகங்களைத் தேடித் தேடி வாங்கி வைத்ததோடு அவற்றை அழகாகவும் சுத்தமாகவும் அடுத்த தமிழ்த் தலைமுறைக்குச் சொத்தாகப் பராமரிக்கும் 'ஞானாலாயா' கிருஷ்ணமூர்த்தி தம்பதியரை மக்கள் சிந்தனைப் பேரவை மனப்பூர்வமாக வாழ்த்துகிறது ! பாராட்டுகிறது !